# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 122 | வியாழக்கிழமை Thursday | 30.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# 126 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் விஜய் வழங்கினார்



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-I பணிகளுக்கும்,தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு பணியிடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள 126 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகள் தமிழ்நாடு முதல்-அமைச்சர் ச. ஜோசப் விஜய் வழங்கினார். இது தொடர்பாக வெளியான செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

126 நபர்களுக்கு அரசு பணி

தமிழ்நாடு முதல்-அமைச்சர்ச.ஜோசப்விஜய் இன்று (29.07.2026) தலைமைச் செயலகத்தில், மனித வள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், தொகுதி-I பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 78 நபர்களுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 48 நபர்களுக்கும் பணிநியமனஆணைகளைவழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், தொகுதி-I பணிகளுக்கு 28துணை ஆட்சியர்கள்,7 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 19 உதவி ஆணையர்கள் (வணிக வரி), 15 உதவி இயக்குநர்கள் (ஊரகவளர்ச்சி),3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மற்றும் 6 உதவி ஆணையர்கள் (தொழிலாளர்) என மொத்தம் 78 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில்,தொழிலாளர் நலத்துறையின் உதவி ஆணையர் (தொழிலாளர்) பணியிடம் முதன்முறையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-I-இல் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் மூலம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில், 40 உதவி பொறியாளர்கள், 6 சுற்றுச்சூழல்விஞ்ஞானிகள் மற்றும் 2 நூலகர்கள் தரம்-II என மொத்தம் 48 நபர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், தொகுதி-I பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 78 நபர்களுக்கும்,தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு பணியிடங்களுக்குத்தெரிவுசெய்யப்பட்டுள்ள 48 நபர்களுக்கும் தமிழ்நாடு முதல்-அமைச்சர்இன்று பணிநியமன ஆணைகளை வழங்கி,அனைவருக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மனித வள மேலாண்மைத்துறைஅமைச்சர்த. சரத்குமார்,சுற்றுச்சூழல் மற்றும்காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வே.க.ராஜீவ்,தலைமைச் செயலாளர் மு. சாய்குமார்,சுற்றுச்சூழல்,காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி. சமயமூர்த்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் அனுராக் மிஷ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக உரிமையை பாதுகாக்க தி.மு.க. கம்யூனிஸ்டுகள் கைகோர்க்கும்

## எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில உதவும் கைகள் அறக்கட்டளை மற்றும் திணை நிலவாசிகள் அமைப்பு இணைந்து நடத்திய நிகழ்வில் மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் மார்பளவு திருவுருவச் சிலையை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து "அம்மாச்சி - கற்பனையின் முதல் ஆசிரியர்" என்ற நூலை வெளியிட்டார்.

அதன்பின்னர் விழாவில் பேசியதாவது:-

தோழர் நல்லகண்ணுவின் சிலையை திறந்து வைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் நல்லகண்ணுவுக்கு சிலை அமைத்ததன் மூலம் யாரை நாம் கொண்டாட வேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி உணர்த்துகிறது. மக்களுக்கான களப் போராளிகளை கொண்டாடுவதை விட இன்ஸ்டாகிராமில்ரீல்ஸ் எடுப்பவர்களை சமூகம் அதிகம் கொண்டாடுகிறது.

கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது தனிப்பாசம் 2016-ஆம் ஆண்டு திமுக வெற்றி வாய்ப்பை இழந்த போதும், கருணாநிதி பத்திரிகையாளர்களிடம்பேசும்போது, "திமுக ஆட்சியை இழந்ததை விட, தமிழ்நாடு வரலாற்றில் முதல்முறையாக கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத சட்டப்பேரவை அமைந்திருக்கிறது. அதுதான் எனக்கு வருத்தம் என தெரிவித்தார். அந்தளவுக்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது கருணாநிதிக்கு தனிப்பாசம் இருந்தது.

கருணாநிதி வழியில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினும் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது தனிப் பாசம் கொண்டுள்ளார். தமிழ் மொழி உரிமையையும், தமிழ்நாட்டு உரிமையையும் பாதுகாக்க திராவிட இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் என்றும் ஓரணியில் கைகோர்த்து நிற்கும். தமிழ்நாட்டின் உரிமைக்கு எதிராக எது நடந்தாலும் திமுக-கம்யூனிஸ்ட் ஓரணியில் நிற்கும்.

நீட் எதிர்ப்பு போராட்டம் என்பது தமிழ்நாட்டிற்கு புதிதல்ல. நீட் நுழைவுத் தேர்வு என்று வந்ததோ அன்றிலிருந்தே திமுக எதிர்த்து வருகிறது. 2021 திமுக ஆட்சி அமைந்ததும் நீட் பாதிப்பை கண்டறிய ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் அப்போதைய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் குழு அமைத்தார். அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நீட் விலக்கு வேண்டி திமுக அரசு சட்டப்பேரவையில் சட்ட முன்வடிவை கொண்டு வந்தோம்.

அதற்கு கவர்னர் ஒப்புதல் தராத நிலையில், இதற்காக சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று போராடியது திமுகதான். நீட் தேர்வு போராட்டம் முடிந்துவிட்டதாக கருதவில்லை. இப்போதுதான் இன்னும் வீரியமாக ஆரம்பித்துள்ளது. நீட் தேர்வை முற்றிலும் ஒழிப்பதற்கான தொடக்கமாகத் தான் இந்தப் போராட்டம் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக தமிழகம் முழுவதும் 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை




தமிழ்நாட்டில் தற்போது 4,048 பதிவு செய்யப்பட்ட டாஸ்மாக் விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.102 கோடி அளவுக்கு முறைசாரா வழிகள் மூலம் டாஸ்மாக் வருவாய் கட்சி நிதி என்ற பெயரில் திசை திருப்பப்பட்டு வந்ததுடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் இதன் மூலம் மாநில அரசுக்கு ஏற்பட்ட இழப்புகள் ரூ.3,600 கோடியை தொட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டது.

இது குறித்து மூத்த அரசு அதிகாரிகள் தமிழக முதல்-அமைச்சர் விஜய்யிடம் கூறியதையடுத்து, புதிய அரசு டாஸ்மாக் வருவாயில் வெளிப்படைத்தன்மையுடைய செயல்பாட்டை தொடங்க உத்தரவிட்டது. மேலும், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் முறையை மறுஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

717 மதுபான விற்பனை நிலையங்கள்

இதனிடையே தமிழக அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், பள்ளி, கல்லூரிகள்,மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இயங்கி வந்த 717 மதுபான விற்பனை நிலையங்களை தமிழக அரசு மூடியிருக்கிறது. டாஸ்மாக் மதுக்கடைகள் மூலம் வரும் ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக அரசின் கருவூலத்துக்கு வந்து சேருவதை உறுதி செய்யவும் அதிகாரிகளுக்கு முதல்-அமைச்சர்விஜய் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதிகாரப்பூர்வமற்ற பண வசூல் அமைப்புகள்

தமிழ்நாட்டில் இயங்கும் டாஸ்மாக்கின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் முழுவதும் நீண்ட காலமாக இயங்கி வரும் அதிகாரப்பூர்வமற்றபணவசூல்அமைப்புகளை கலைத்துவிடவும் அதிகாரிகளுக்கு முதல்-அமைச்சர்விஜய் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

41 இடங்களில் சோதனை

இந்நிலையில் டாஸ்மாக்முறைகேடுதொடர்பாக தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறைஅதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். இதன்படி ஈரோடு, கோவை (பீளமேடு),பொள்ளாச்சி,நரசிம்மநாயக்கன் பாளையம், நவகரையில் உள்ள கிடங்குகளில் சோதனை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேட்டுப்பாளையம் நரசிம்ம நாயக்கன்பாளையத்தில் சிவாஸ் மதுபான தயாரிப்பு ஆலைமற்றும்மன்னார்குடியில் உள்ள டி.ஆர். பாலுவுக்கு சொந்தமான மதுபான ஆலையிலும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் தொண்டி சாலையில் உள்ள டாஸ்மாக் குடோனில்,ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு துறை டி.எஸ்.பி. ராமச்சந்திரன் தலைமையிலான போலீசார் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சோதனையில் கணக்கில் வராத லட்சக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கேரளாவிற்கு கனிம வளங்கள் கொண்டு செல்வதற்கு மூன்று மாத தடை: கடையநல்லூர் எம்.எல்.ஏ. தி.மு. இராசேந்திரனின் தொடர் முயற்சிக்கு வெற்றி



புவியியல்மற்றும் சுரங்க துறை இயக்குனர் டாக்டர் பிரபு சங்கர் இ.ஆ.ப.அவர்கள் வெளியிட்ட அறிக்கையின்படி தமிழகத்தில் இருந்து மூன்று மாத காலத்திற்கு கனிம வளங்கள் எங்கும் கொண்டு செல்ல முடியாது என்பதை தொடர்ந்து புளியரை காவல்துறை சோதனை சாவடியில்கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. ராசேந்திரன் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது இதுகுறித்து அவர் கூறியதாவது

செங்கோட்டை – கடையநல்லூர் – தென்காசி – குற்றாலம் – சுரண்டை – கடையம் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும்; பொதுமக்கள் நிம்மதி இதனால் பொது மக்கள்நிம்மதி அடைவார்கள்

தமிழ்நாட்டிலிருந்து கருங்கல் (Rough Stone) மற்றும் ஜல்லிகளை பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்கு மூன்று மாதங்கள் தற்காலிகத் தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மாநிலத்தின் கட்டுமானத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சட்டவிரோத கனிமம் போக்குவரத்தை கட்டுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

, குறிப்பாக செங்கோட்டை வழியாக கேரள மாநிலத்திற்கு நாள்தோறும்அதிகஅளவில் கருங்கல் மற்றும் ஜல்லிகள் கொண்டு செல்லப்பட்டு வந்தன. இதனால் செங்கோட்டை, கடையநல்லூர், தென்காசி, குற்றாலம், சுரண்டை, கடையம் உள்ளிட்ட பகுதிகளில் கனரக வாகனப் போக்குவரத்து அதிகரித்து, போக்குவரத்து நெரிசல், சாலைப் பாதுகாப்பு சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. மேலும், கனிம வளங்கள் வெளிமாநிலங்களுக்கு அதிகளவில் கொண்டு செல்லப்படுவதால்,தென்காசி மாவட்டத்தின் உள்ளூர் கட்டுமானப் பணிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்த நிலையில், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றது முதல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். தமிழக அமைச்சரை நேரில் இருமுறை சந்தித்து கோரிக்கை விடுத்ததுடன், கடந்த 23.07.2026 அன்று தமிழ்நாடு அரசுக்கும் கனிமவளத் துறைக்கும் விரிவான முறையீடு அளித்திருந்தேன்.

அதேபோல், தென்காசி மாவட்டத்திற்கு முதன்முறையாக பொறுப்பு அமைச்சராக டாக்டர் ராஜீவ் அவர்கள் வருகை தந்தபோதும், மாவட்டத்தின் முக்கியமான மற்றும் பதற்றமான பிரச்சினைகளில் ஒன்றாக வெளிமாநிலங்களுக்கு கனிமவளங்கள் கொண்டு செல்லப்படுவது தொடர்பான பிரச்சினையை எம்.எல்.ஏ. தி.மு. இராசேந்திரன் அவர்கள் எடுத்துக்கூறி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினேன்.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு சட்டவிரோத சுரங்கம் தோண்டுதல், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு விதிகள், 2011-ன் விதி 3(A)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களைத் தவிர்த்து பிற மாநிலங்களுக்கு கருங்கல் மற்றும் ஜல்லிகளை கொண்டு செல்வதற்கு உடனடியான அமலுக்கு வரும் வகையில் மூன்று மாதங்கள் தற்காலிகத் தடை விதித்து தமிழ்நாடு கனிமவளத் துறை உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவின் மூலம் தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான ஜல்லி மற்றும்கருங்கல்பொருட்கள் போதுமான அளவில் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், வெளிமாநிலங்களுக்கு செல்லும் கனரக வாகனங்களின் எண்ணிக்கை குறைவதால் செங்கோட்டை,கடையநல்லூர், தென்காசி, குற்றாலம், சுரண்டை, கடையம் உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.நாள்தோறும் கனரக வாகனப் போக்குவரத்தால் அவதிப்பட்டு வந்த பொதுமக்களுக்கு தமிழக அரசின் இந்த நடவடிக்கை நிம்மதியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளுக்கும், தமிழக அமைச்சரை நேரில் சந்தித்து இருமுறை வலியுறுத்தியதற்கும், மாவட்டத்திற்கு வருகை தந்த பொறுப்பு அமைச்சரிடம் பிரச்சினையை எடுத்துரைத்ததற்கும் கிடைத்த முக்கியமான வெற்றியாக தமிழக அரசின் இந்த மூன்று மாதத் தடை ஆணை பார்க்கப்படுவதாக கூறினார்எனினும், மூன்று மாத காலத் தற்காலிகத் தடையை மட்டுமல்லாமல்மற்றும்நிரந்தரமான கட்டுப்பாடாக மாற்றி, தென்காசி மாவட்ட மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என கூறினார் பேட்டியின் போது முன்னாள் திமுக வடக்கு மாவட்ட கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர் செல்லத்துரை புதூர் பேரூராட்சி தலைவர் ரவிசங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்

## ஜேசுதாஸ் மீது அளிக்கப்பட்ட பொய் புகாருக்கு இடமளிக்கக் கூடாது; மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தவெக வழக்கறிஞர்கள் மனு



தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர்ஜேசுதாஸ் மீது லிங்ககுமார் அளித்துள்ளதாக்குதல் மற்றும் மிரட்டல் புகார் பொய்யானது என்றும், முழுமையான விசாரணை இன்றி அவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் வலியுறுத்தி, தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர் அணியினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத்தை சந்தித்து மனு அளித்தனர்.

சிலநாட்களுக்குமுன்பு மடத்தூர்பகுதியில்நிலத் தகராறு தொடர்பாக லிங்ககுமார் மற்றும் அவரது குடும்பத்தினரை தாக்கியதாகவும், துப்பாக்கி வைத்து மிரட்டியதாகவும்தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர்ஜேசுதாஸ் உள்ளிட்ட சிலர் மீது லிங்ககுமார் காவல்துறையில் புகார் அளித்திருந்தார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில்,இன்று ஜேசுதாஸ் உள்ளிட்ட தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு அளித்து, லிங்ககுமார் அளித்துள்ள புகார் முழுமையாக பொய்யானது என தெரிவித்தனர்.

பின்னர்செய்தியாளர்களிடம் சி.மந்திரமூர்த்தி தெரிவிக்கையில்: "மடத்தூரில் உள்ள சம்பந்தப்பட்ட நிலத்திற்கு லிங்ககுமாருக்கு எந்தவித உரிமையும் இல்லை. அந்த இடம் மனோகர் என்பவரின் உறவினருக்குச் சொந்தமானது. அந்த நிலம் தொடர்பான வழக்கில் வழக்கறிஞர் ஜேசுதாஸ் ஆஜராகி வருவதால், அவருக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் பொய்யான புகார் அளிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "அமைச்சர் ஸ்ரீநாத் வெற்றிக்காகவும்,திமுகவிற்கு எதிராக பல்வேறு வழக்குகளில் சட்டரீதியாக செயல்பட்டு வரும் ஜேசுதாஸ் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் தொடர்பான வழக்கிலும் ஜேசுதாஸ் ஆஜராகியிருந்தார். மேலும், முதலமைச்சர் குறித்து அவதூறு கருத்து தெரிவித்த வழக்கில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் அவர் சட்டரீதியாகசெயல்பட்டிருந்தார். இதன் காரணமாகவே அவர் மீது திட்டமிட்டு பொய்யானபுகார்அளிக்கப்பட்டுள்ளது" என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே, காவல்துறை முழுமையான விசாரணை நடத்தி உண்மை நிலையை கண்டறிந்து, பொய்யான புகாரின் அடிப்படையில் ஜேசுதாஸ்மீது எந்தவிதநடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர் சி.மந்திரமூர்த்தி தெரிவித்தார்.



## உலக ஹெபடைடிஸ் தினத்தை முன்னிட்டு

# கோவை ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய விஜிஎம் மருத்துவமனை ஹெபடைடிஸ் நிபுணர் டாக்டர் மித்ரா பிரசாத்

நாடு முழுவதும் ஜூலை 28ம் தேதியினை, உலக ஹெபடைடிஸ் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், கோவை மாவட்டம்கோவைபுதூர் பகுதியில் உள்ள, ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ மாணவியர்களுக்கு ஹெபடைடிஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.கல்லூரிமாணவர்களிடையே சமூக சேவை மனப்பான்மையையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்ப்பதற்காக மத்திய அரசால்செயல்படுத்தப்படும் ஒரு அமைப்பான தேசிய சேவை இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியினை,

கோவை சிங்கா நல்லூர் விஜிஎம் மருத்துவமனை முன்னெடுத்தது. இந்த நிகழ்ச்சியில், கோவை விஜிஎம் மருத்துவமனையின் மருத்துவரும், ஹெபடைடிஸ் நிபுணருமான டாக்டர் மித்ரா பிரசாத் மாணவ மாணவியர்கள் மத்தியில் ஹெபடைடிஸ் குறித்து விளக்க வுரையாற்றினார்.

அப்பொழுது மாணவ மாணவியர்கள் மத்தியில்அவர் கூறியதாவது..

ஹெபடைடிஸ் என்பது மனித உடலின் மிகப்பெரிய உட்புற உறுப்பாகும். நாம் உண்ணும் கொழுப்பைச் செரிக்கவும், உறிஞ்சவும் உதவும் பித்த நீரைச் சுரக்கிறது. மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் உடலுக்குத் தேவையில்லாத கழிவுப் பொருட்களை ரத்தத்தில் இருந்து பிரித்து சுத்திகரிக்கும் பணிகள் உள்ளிட்ட 500க்கும்மேற்பட்டபணிகளை செய்கின்றது. ஹெபடைடிஸ் செயல் இழப்புக்கு காரணம் அதிக மது அருந்துவது, புகை பிடிப்பது, போன்ற பல்வேறு கெட்ட பழக்க வழக்கங்களால், கல்லீரல் வீக்கம், கொழுப்புப் படிவது, போன்ற பல்வேறு நோய்க்கு வழிவகுக்கும், உடல் பருமன், நீரிழிவு மற்றும் அதிக கொல ஸ்ட்ரால் காரணமாக கல்லீரலில் கொழுப்புசேரும்,இவைகள் கல்லீரலை மெதுவாகப் பாதித்து செயலிழக்கச் செய்யும்.

மதுப்பழக்கத்தைத் தவிர்த்தல் அல்லது முழுமையாகக் கட்டுப்படுத்துதல்.

சீரான உணவு மற்றும் வழக்கமான உடற்பயிற்சி மூலம் உடல் எடையைக் கட்டுக்குள் வைத்தல்.

மருத்துவர் வழிகாட்டுதல் இன்றி சுயமாக மருந்துகளை உட்கொள்ளாமல் இருப்பது போன்றவழிமுறைகளை பின்பற்றினால் ஹெபடைடிஸ் பாதிப்பின்றி நீண்ட நாள் உயிர் வாழலாம்என்றுதெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில், கல்லூரியின் முதல்வர் ஜூலியன் ஞான தாஸ், என்.எஸ்.எஸ் நிகழ்ச்சி அதிகாரி பிரபின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நீலகிரி மாவட்டம் உதக மண்டலத்தில் விஜிஎம் மருத்துவமனை சார்பாக,சுமார் 200 நபர்களுக்கு, ஹெபடைடிஸ் தடுப்பு மருந்துகள் இலவசமாக வழங்கினர் என்பது குறிப்பிட த்தக்கது.

# மதுரையில் மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு



மதுரை மாவட்டத்தில் நாள்தோறும் உருவாகும் மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்காக நிரந்தர Common Bio-Medical Waste Treatment Facility (CBWTF) அமைக்கவேண்டும்என்றும், மருத்துவக் கழிவு மேலாண்மையில் நிலவும் குறைபாடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்தி, தென் தமிழக மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான பரிந்துரைகளைதமிழகஅரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும் வலியுறுத்தி, மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர் கார்த்திக் கண்ணன்,பொது நல ஆர்வலர் டாக்டர் பி.சர்மேஷ் கான் ஆகியோர் மதுரை மாவட்ட ஆட்சியருக்கு மனு அளித்துள்ளார். மனுவில், மதுரை மாவட்டத்தில்அரசு மற்றும்தனியார் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், கிளினிக்குகள், ஆய்வகங்கள், பல் மருத்துவமனைகள்,கால்நடை மருத்துவமனைகள் உள்ளிட்ட மருத்துவ நிறுவனங்களிலிருந்து நாள்தோறும் சுமார் 4.5 டன் மருத்துவக் கழிவுகள் உருவாகுவதாகவும், அவற்றை அறிவியல் முறையில் பாதுகாப்பாக சுத்திகரித்து அகற்றுவதற்கான நிரந்தர வசதி இல்லாதது பொதுசுகாதாரம் மற்றும் சுற்றுச்சூ ழலுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே கோரிக்கையுடன் ஏற்கனவே மாவட்ட நிர்வாகத்தி டம் மனு அளிக்கப்பட்டதாகவும், மாவட்ட சுகாதாரத் துறை அதிகாரிகள் மூலம் ஆய்வுக் குழு அமைத்து அரசுக்கு அறிக்கை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட நிலையில், பின்னர் மனு அதன் நோக்கத்திற்கேற்ப பரிசீலிக்கப்படாமல் மாற்றி அனுப்பப்பட்டதாகவும்,இதுவரைஉரிய நடவடிக்கையோ அல்லது எழுத்துப்பூர்வ பதிலோ கிடைக்கவில்லைஎன்றும் மனுவில் குற்றம்சா ட்டப்பட்டுள்ளது. மதுரை மட்டுமின்றிசிவகங்கை,ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், தேனி உள்ளிட்ட தென் தமிழக மாவட்டங்களிலும் மருத்துவக் கழிவுகளை சுத்திகரிக்கும்போதுமான வசதிகள் இல்லாததால், இதனை தென் தமிழகத்தின் ஒருங்கிணைந்த பொதுசுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரச்சினை யாகக் கருதி, புதிய மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான பரிந்துரைகளைதமிழகஅரசுக்கு அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது. பொதும க்கள், சமூக நல அமைப்புகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச்சேர்ந்தபிரதிநிதிகள் இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வருவதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தமிழ்நாட்டின் 38 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்புஅமைதியானகவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எழுத்துப்பூர்வ விளக்கம் அளிப்பதோடு, புதிய மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஆய்வுக் குழுவை உடனடியாக அமைத்து, அதன் அறிக்கையை அரசுக்கு அனுப்பி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஆடி அமாவாசையை பொதுவிடுமுறையாக அறிவிக்க வேண்டும்

## இந்து மக்கள் கட்சி தொண்டரணி

## மாநில துணைத்தலைவர் குரு ஐயப்பன் வலியுறுத்தல்

இந்து மக்கள் கட்சி தொண்டரணி மாநில துணைத்தலைவர்திரு.*குருஐயப்பன்*அவர்கள் இன்று வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்து சமுதாயத்தின் அடிப்படையே "முன்னோர் வழிபாடு" ஆகும். "மாதா பிதா குரு தெய்வம்" என்று நம் முன்னோர்கள் காட்டிய வழியில், நம்மை பெற்று வளர்த்த முன்னோர்களுக்கு நன்றி செலுத்துவது ஒவ்வொரு இந்துவின் தலையாய கடமையாகும். இதைத்தான் நம் சாஸ்திரங்கள் "பித்ரு ருணம்" என்று போற்றுகின்றன. ஆடி மாதம் தட்சிணாயன புண்ணிய காலத்தின் தொடக்கமாகும். தேவர்களுக்கு ஒரு நாள் என்பது நமக்குஒருவருடம். ஆடிமுதல்மார்கழி வரை உள்ள 6 மாதங்கள் தேவர்களின் இரவு காலம். இந்த புனித காலத்தில் வரும் *12.08.2026 புதன்கிழமை ஆடி அமாவாசை* அன்று நாம் செய்யும் தர்பணம், திதி, தான தர்மங்கள் நேரடியாக நம் முன்னோர்களை சென்றடையும் என்பது நம்பிக்கை.



21தலைமுறைமுன்னோர்களும்,7தலைமுறை பின்னோர்களும்சேர்ந்துநம்மைஆசீர்வதிக்கும் நாள் இது. மகாபாரத வீரன் கர்ணன் கூட தான் இறந்த பின் ஆடி அமாவாசை அன்று தான் முதன்முதலில் தர்பணம் பெற்றார். அதனால் தான் இது "கர்ணதர்பணநாள்" என்று புனிதமாக கொண்டாடப்படுகிறது.

*இந்து பாரம்பரியத்தின் அடையாளம்:*

தமிழ்நாட்டில் ராமேஸ்வரம் கடல், கன்னியாகுமரி சங்கமம், ஸ்ரீரங்கம் காவிரி கரை போலவேதேனிமாவட்டத்தில்வைகைநதிக்கரை, சுருளி அருவி, பெரியகுளம், தேவதானப்பட்டி போன்ற புனித தலங்களில் ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்கள், காலையிலேயே நீராடி, புத்தாடை அணிந்து, எள்ளும் தண்ணீரும் இறைத்து முன்னோர்களை வழிபடுவது நூற்றாண்டுகாலபாரம்பரியமாகும்.இதுவெறும் சடங்கு அல்ல. இது நம் கலாச்சாரம், நம் ரத்தில் ஊறிய உணர்வு.

ஆனால் *12.08.2026 புதன்கிழமை* வேலை நாளாக இருப்பதால், அரசு ஊழியர்கள் விடுப்பு எடுக்கமுடியாமல்,பள்ளிகல்லூரிமாணவர்கள் வகுப்பை விட முடியாமல், பொதுமக்கள் அலுவலக வேலைக்கு செல்ல வேண்டிய நிர்பந்தத்தில் இந்த புனித கடமையை பாதியில் விட்டு செல்கின்றனர்.

இது இந்து சமுதாயத்தின் மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. தைப்பூசம், விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜைக்கு விடுமுறை இருக்கும் போது, முன்னோர் வழிபாட்டின் உச்ச நாளான ஆடி அமாவாசைக்குமட்டும்விடுமுறை இல்லாதது பாரபட்சமாக உள்ளது.

எனவே *2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி புதன்கிழமை வரும் ஆடி அமாவாசை தினத்தை* முதல் கட்டமாகவும், அதன் பின் ஒவ்வொரு ஆண்டும் ஆடி அமாவாசையை அரசு பொதுவிடுமுறையாக அறிவிக்க வேண்டும் என தமிழகஅரசை இந்து மக்கள் கட்சி தொண்டரணி சார்பாக மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இந்து மக்களின் பாரம்பரியத்தையும் உணர்வு களையும் மதித்து முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அரசாணை வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இப்படிக்கு, குரு ஐயப்பன் மாநில துணைத்தலைவர், தொண்டரணி இந்து மக்கள் கட்சி, தேனி மாவட்டம்



# சிதலமடைந்த பத்மாபுரம் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவிலை புனரமைக்க கோரி ஆட்சியரிடம் இந்து மக்கள் கட்சி மனு



ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் வட்டம், பத்மாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவிலை புனரமைத்து, மீண்டும் பொதுமக்கள் வழிபாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கக் கோரி இந்து மக்கள் கட்சி சார்பில் இன்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் அளிக்கப்பட்ட மனுவில், இந்து மக்கள் கட்சியின் தமிழக நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத் மற்றும் சமூக ஊடகப் பிரிவு மாநிலத் தலைவர் ஜெ. கண்ணன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில், சோளிங்கர் வட்டம் பத்மாபுரம் கிராமத்தில் புல எண் 24/1-ல் அமைந்துள்ள அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், சுமார் ஆயிரம் ஆண்டுகளாக சுவாமிக்கு பூஜை, புனஸ்காரங்கள் நடைபெற்று வந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து காணப்படுவதுடன், கோவில் நிலத்தை சிலர் ஆக்கிரமிக்க முயற்சிப்பதாகவும் மனுவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகம் நேரில் ஆய்வு மேற்கொண்டு கோவிலை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவும், இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையருக்கு உரிய உத்தரவு பிறப்பிக்கவும், மேலும் கோவிலுக்கு புதிய அறங்காவலர் குழுவை அமைத்து, உள்ளூர் முக்கியஸ்தர்களை நியமித்து தினசரி பூஜைகள் மற்றும் வழிபாடுகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது.

மேலும், சிதிலமடைந்த கோவிலின் புகைப்படங்களும் மனுவுடன் இணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த மனு, இந்து மக்கள் கட்சி மற்றும் பத்மாபுரம் கிராம மக்களின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டது.

# சிறப்பு தகுதித் தேர்வில் பணிமூப்பு மற்றும் கற்பித்தல் செய்முறைக்கு மதிப்பெண் வழங்கி, அனைத்து ஆசிரியர்களையும் தேர்ச்சி பெற வைக்க வேண்டும்



சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றம், பணியில் இருக்கும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) எழுதித் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதாவது, ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்குள் உள்ள ஆசிரியர்களுக்குத் தேர்வில் இருந்து விலக்களித்துள்ளது. அதேநேரம், ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்கள் பணியில் தொடர வேண்டுமானால், மூன்று ஆண்டுகளுக்குள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்; அப்படித் தேர்ச்சி பெற்றால் மட்டுமே பணியைத் தொடர முடியும் என்று தீர்ப்பு வழங்கி ஆசிரியர்களை அதிர்ச்சி அடையச் செய்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து அரசிடம் கருத்து கேட்கப்பட்டது. அதிலே ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களும் 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்விலிருந்து விலக்களிக்கக் கேட்டுக்கொண்டோம். மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்துச் சீராய்வு மனுத் தாக்கல் செய்யவும் கேட்டுக்கொண்டோம். அப்படியும் தீர்ப்பு வேறுவிதமாக வரும் பட்சத்தில், அனைத்து ஆசிரியர்களையும் கைவிடாமல் அனைவரும் பணியில் தொடரும் வகையில் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்த வேண்டும் என்றும், மற்ற மாநிலங்கள் இத்தகைய சூழலை எவ்வாறு கையாளுகின்றன என்பதை எல்லாம் எடுத்துரைத்தோம். சமூக நீதி அடிப்படையிலும் இடஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்ச்சி மதிப்பெண்ணை அறிவிக்கக் கேட்டுக்கொண்டோம்.

சென்ற 4ஆம் தேதி இடைநிலை ஆசிரியர்களுக்கான முதல் தாளும், 5ஆம் தேதி பட்டதாரி ஆசிரியர்களுக்கான சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வும் நடைபெற்றன. இந்தத் தேர்வு நாங்கள் கோரிக்கை வைத்ததற்கு முற்றிலும் மாறாக இருந்தது. முழுக்க முழுக்க வேலை தேடும் தேர்வர்களுக்கு நடத்தப்பட்ட தேர்வை விட மிகக் கடினமாக இருந்தது.

12ஆம் வகுப்பு மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் இதில் கேட்கப்பட்டிருந்தன. இடைநிலை ஆசிரியர்கள் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலும், பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலும் உள்ள மாணவர்களைக் கையாளுபவர்கள் என்பதை வினாத்தாள் வடிவமைப்பாளர்கள் அறியாமல் வடிவமைத்துள்ளனர்.

இருபது ஆண்டுகளாக ஒரே பாடத்தைப் பயிற்றுவித்து வரும் ஆசிரியர்கள் எப்படி இது போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும்? இது எப்படி இருக்கிறது என்றால், தொடர்ந்து பயிற்சியில் இருக்கும் இளைஞர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஒரு குறிப்பிட்ட வினாடிக்குள் இலக்கை அடைய வேண்டும் என்று நேரத்தை நிர்ணயம் செய்து, அந்த இலக்கை அடைந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற விதியை ஏற்படுத்திப் போட்டியை நடத்துவது போன்றதாகும். அது இளைஞர்களுக்குச் சாத்தியம். கடந்த 15 ஆண்டுகளாக சம வேலைக்கு சம ஊதியம் கேட்டு போராடும் இடைநிலை ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று ஊதிய முரண்பாட்டை சரி செய்து ஊதியம் வழங்க வேண்டும் , மேலும் கடந்த ஆட்சியில் சம வேலைக்கு சம ஊதியம் வழங்க காலவரையற்ற வேலைநிறுத்தபோராட்டத்தை நடத்தினர் அப்போது ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டது, பிடித்தம் செய்யப்பட்ட நாட்களை ஈடு செய்யும் பொருட்டு ஈட்டிய விடுப்பாக கருதி ஊதியம் வழங்க வேண்டும்

மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் சமூக நீதி ஆட்சியில் நிறைவேற்றி கொடுக்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் ஆ.ராஜ்மோகன் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



# ஆலங்குளம் அருகே ஸ்டஅக் ஹைடெக் பள்ளி மாணவ, மாணவிகள் மாவட்ட சாம்பியன் பெற்று சாதனை

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே இடைகாலில் உள்ள மெரிட் கல்லூரியில் மாவட்ட அளவிலான பத்தாம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்த போட்டிகளில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் இருந்து 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இடைகால் ஸ்டஅக் ஹை டெக் பள்ளி மாணவர்கள் இவற்றில் பங்கேற்று பள்ளிகளுக்கான ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றனர்.

19 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் செல்வகுமார் நீளம் தாண்டுதல் மற்றும் மும்முறை தாண்டுதல் ஆகியவற்றில் முதலிடம் பெற்று 10 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார்.

17 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் கிருஷ்ணன் 400 மீ ஓட்டம், 800 மீ ஓட்டம், 1500 மீ ஓட்டம் மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதல் இடம் பெற்று 15 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். 14 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மாணவன் சிபினேஷ் 400 மீ ஓட்டம், 600 மீ ஓட்டம், மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதலிடமும் 100 மீ ஓட்டத்தில் இரண்டாமிடமும் பெற்று 13 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். மேலும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் ஆஷிஷ் ராஜன், பரிக்சித் மகாதேவ், அபிலேஷ், ஆலன் பிரின்ஸ், 17 வயதுக்குட்பட்டோர் மாணவர்கள் பிரிவில் நகுல், ஜெயசூர்யா, அக்சயகுமரன், ஹரிஷ் பாபு ஆகியோர் தத்தமது போட்டிகளில் வென்றனர். மாணவிகள் பிரிவில் 14 வயதிற்குட்பட்டோரில் ஶ்ரீ நிதி மற்றும் சிஜிதா, 17 வயதிற்குட்பட்டோரில் கார்த்திகா ஆகியோரும் பங்கேற்ற போட்டிகளில் வெற்றிபெற்றனர். ஒட்டுமொத்தமாக 65 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடம் பெற்று ஸ்டஅக் ஹைடெக் பள்ளி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. போட்டிகளில் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் அஷ்வின் குமார் மற்றும் ராம்குமார் ஆகியோரை பள்ளி தலைவர் முருகன் தாளாளர் புனிதாசெல்வி செயலாளர் ஆஷிஷ்லிங் மற்றும் முதல்வர் பிரவின் குமார் வாழ்த்தினர்.

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சி பணியாளர்கள் சங்கத்தின் ஆர்ப்பாட்டம்



உதவியாளர் நேரடி நியமனம் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்வதை ரத்து செய்து நீர்வளத் துறையில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை பதிவு உயர்வின் மூலம் நிரப்ப வேண்டும் கோட்ட கணக்கர் பதவியினை நெடுஞ்சாலைத்துறையில் நடைமுறையில் உள்ளது போல் மாநில சேவை ஆக்கப்பட வேண்டும் கருணை அடிப்படையில் 25% நியமனம் உடனடியாக அமல்படுத்த வேண்டும் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துவறையில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும் பத்து ஆண்டுகள் பணியாற்றிய தினக்கூலி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை தல்லாகுளம் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சி பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதுரை மாவட்ட தலைவர் சிவக்குமார் சிவகங்கை மாவட்ட செயலாளர் கோடைமலை குமரன் TNPWDAASA மதுரை மாவட்ட செயலாளர் ராஜா மாநில செயலாளர் சின்னப்பா செல்வராஜ் மாநில செயலாளர் நீதி ராஜா TNGEA மாவட்ட தலைவர் தமிழ் TNGEA மாவட்ட செயலாளர் சந்திரபோஸ் TNGEA ராமநாதபுரம் மாவட்ட தலைவர் நஜ்முதீன் TNPWDAASA பொதுச்செயலாளர் கோமதிநாயகம் TNPWDAASA மதுரை மாவட்ட பொருளாளர் அசோக் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்



நேரம் ஒதுக்குங்கள். குறிக்கோள்களை அடைந்த பிறகு உங்களை ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இவை உங்கள் வளர்ச்சிக்கு மட்டும் இல்லாமல், ஒரு சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்க உதவும். பாடப்புத்தகங்களுடன் மட்டுமல்லாமல் கூடுதல் தகவல்களை புத்தகங்கள், இணையம் மற்றும் மனித உறவு செயல்பாடுகள் மூலம் கண்டறியுங்கள் எனவும், மாணவர்கள் தங்களது கல்வி பயணம், எதிர்கால திட்டங்கள், விருப்பங்கள், சமூகம் குறித்தான தங்களது பார்வை குறித்து பகிர்ந்து கொண்டனர். கல்வி கற்கும்போது நண்பர்களுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்து கற்றால் ஒருவரது அறிவு மற்றவருக்கும்பயனுள்ளதாகஇருக்கும்என்றார். கல்வி, நட்பு, விளையாட்டு ஆகியவற்றை எவ்வாறு தினசரி வாழ்வில் சமநிலைப்படுத்தி கையாள்வது போன்ற மாணவர்களின் வினாக்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் விடை அளித்தார். மாணவர்கள், மாவட்ட ஆட்சியர் பணி, அலுவலக நடைமுறைகள் சார்ந்து தங்களுக்கு இருந்த பல ஐயங்களை கேட்டு தெளிவு பெற்று, மாவட்ட நிர்வாகம் மற்றும் ஆளுமையின் செயல்பாடுகளைப் புரிந்துகொண்டனர், மாணவர்கள் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டமாணவர் தலைமையிலான யோசனைகள் மற்றும் முன்னெடுப்புகளை மாவட்ட ஆட்சியருடன் பகிர்ந்து கொண்டனர். மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலையும் ஊக்கத்தையும் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் .ரேணுகா, மாவட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர், மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், மாதிரிப் பள்ளியினைச் சார்ந்த மாணவர் மன்ற (மாணவர் கலெக்டிவ் )உறுப்பினர்கள், பள்ளியின் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் அருகே ஊருக்குள் புகுந்த காட்டு யானைகள் அட்டகாசம்

## வாழை, தென்னை மரங்கள் சேதம் - விவசாயிகள வேதனை



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்து நேற்று இரவு காட்டு யானைகள் கூட்டமாக வனப்பகுதியை விட்டு வெளியேறி அருகிலுள்ள வைரவன் குளம் புரவில் புகுந்து அட்டகாசம் செய்தன. வைரவன் குளம் புரவில் நுழைந்த யானைகள் விவசாய நிலங்களில் இருந்த வாழைத்தோட்டங்களையும், தென்னைமரங்களையும் சேதப்படுத்தின. பல வாழை மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டதுடன், தென்னை மரங்களும் முறிந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பலாப் பழங்களை காயோடு பிடுங்கி நிலத்தில் வீசி எறிந்துள்ளது இதனால் விவசாயிகள் கடும் வேதனை அடைந்துள்ளனர். மேலும் வைரவன் குறம் புறவுபகுதியில் மலம் பாட்டை ரோடு அரசு மருத்துவமனையில் இருந்து கல்லாறு வரைசெல்லும் தார் ரோட்டில் பெரியாறு வரைஅதிகாலை முதல் ஆண்களும்பெண்களும்நடைபயிற்சிமேற்கொள்வது வழக்கம் யானை நகர் பகுதிக்குள் புகுந்துள்ளதால் அப்பகுதியில் நடைபயிற்சி செல்லும்பொதுமக்களை வனத்துறையினர் எச்சரித்துள்ளனர் மேலும்

வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பொதுமக்கள் யானைகள் அருகே செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்தனர். பின்னர் பட்டாசு வெடித்தும், ஒலி எழுப்பியும் யானைகளை மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் ஈடுபட வேண்டுமென.

தொடர்ந்து மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்துகாட்டுயானைகள் குடியிருப்புபகுதிகளுக்குள் வருவதைத் தடுக்க நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சேதமடைந்த பயிர்களுக்கு உடனடியாக உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அரசுக்கும் வனத்துறைக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆலங்குளத்தில் துணிகரம்..

# சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் அஞ்சல் நிலையத்தில் திருட முயற்சி



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் செயல்பட்டு வரும் சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் அஞ்சல் நிலைய அலுவலக வளாகத்தில் உள்ள கழிப்பறை ஜன்னலின் இரும்புக் கம்பிகளை உடைத்து, மர்ம நபர்கள் திருட முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தகவலறிந்த ஆலங்குளம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.

ஆலங்குளம் காவல் ஆய்வாளர் சாகுல் ஹமீது தலைமையிலான போலீசார், சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா (CCTV) பதிவுகளை ஆய்வு செய்து, திருட முயன்ற மர்ம நபர்களை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஜார்கண்டில் ரூ.2.2 கோடி பரிசு அறிவிக்கப்பட்ட மாவோயிஸ்ட் தலைவர் கைது



ஜார்கண்ட் மாநிலத்தில் செயல்பட்டு வந்த, அரசால் தடை செய்யப்பட்ட சி.பி.ஐ. (மாவோயிஸ்ட்) அமைப்பின் முக்கிய உறுப்பினராக இருப்பவர் மிசிர்பெஸ்ரா(வயது 65). இவரை பற்றிய தகவல் அளிப்போருக்கு ரூ.2.2 கோடி பரிசு தரப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இவர் மீது 141 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. தொடர்ந்து தேடப்பட்ட நபராக இருந்த அவரை, தன்பாத் மாவட்டத்தில் உள்ள மணியாடி பகுதியில் வைத்து போலீசார் நேற்று மாலை கைது செய்தனர். அவருடன் ரூ.15 லட்சம் பரிசு தொகை அறிவிக்கப்பட்ட ஒருவர் உள்பட 2 வேறு மாவோயிஸ்டுகளும் கைது செய்யப்பட்டு உள்ளனர். சாகர்டா மற்றும் பாஸ்கர்டா என்ற பெயராலும் அறியப்படும் இவர், 1980-ம் ஆண்டு முதல் இந்த தடை செய்யப்பட்ட அமைப்புடன் தொடர்பில் இருந்து வருகிறார். இதனால், ஜார்கண்டில் நக்சலிசம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது என்று மாநில டி.ஜி.பி. தடாஷா மிஷ்ரா, ராஞ்சி நகரில் கூறியுள்ளார்.

## வளைகுடா நாடுகளில் இந்தியர்களின் தற்கொலை அதிகரிப்பு:

# காரணங்களை கண்டறிந்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு நிறுவனத்தலைவர் தூத்துக்குடி சம்சுதீன் கண்டனம்



வளைகுடா நாடுகளில் இந்தியர்கள், குறிப்பாக குவைத்தில், அதிகரித்து வரும் தற்கொலை சம்பவங்கள் மிகுந்த கவலை அளிப்பதாகவும், இதற்கான அடிப்படை காரணங்களை கண்டறிந்து மாநில மற்றும் மத்திய அரசுகள் இணைந்து உடனடியாகஉரியநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு இஸ்லாமியகூட்டமைப்பு நிறுவனத் தலைவர் தூத்துக்குடி சம்சுதீன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"குவைத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 162 இந்தியர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருப்பது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. காங்கிரஸ் எம்.பி.க்கள் சட்பால் பிரம்மச்சாரி மற்றும் ஜெயபிரகாஷ் எழுப்பிய கேள்விக்குவெளியுறவுத்துறை இணைஅமைச்சர்கீர்த்தி வர்தன் சிங் அளித்த பதிலில் இந்த புள்ளிவிவரங்கள் இடம்பெற்றுள்ளன.

அதே காலகட்டத்தில் குவைத்தில் மொத்தம் 2,191 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 1,672 பேர் இயற்கை மரணம் அடைந்துள்ளனர். 62 பேர் பணியிட விபத்துகளிலும், 10 பேர் கொலை செய்யப்பட்டும், 285 பேர் பிற காரணங்களாலும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் வளைகுடா நாடுகளில் மட்டும் 1,340 இந்தியர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.இதில் ஐக்கிய அரபு அமீரகத்தில் 511 பேரும், சவுதி அரேபியாவில் 354 பேரும், ஒமானில் 146 பேரும், பஹ்ரைனில் 101 பேரும், கத்தாரில் 66 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2023 முதல் 2025 வரை வெளிநாடுகளில் 1,900-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும், இதில் 70 சதவீதத்திற்கும் அதிகமான சம்பவங்கள் வளைகுடா நாடுகளில் நடந்துள்ளதாகவும் அமைச்சக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மலேசியாவில் 131, அமெரிக்காவில் 62, இத்தாலி, கனடா மற்றும் இங்கிலாந்தில் தலா 30-க்கும் மேற்பட்ட தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்காகச் செல்லும் இந்தியர்கள் எதிர்கொள்ளும் மனஅழுத்தம், பணிச்சுமை, குடும்பப் பிரிவு, பொருளாதார நெருக்கடி, தொழிலாளர் உரிமை பிரச்சினைகள் உள்ளிட்ட காரணங்கள் குறித்து மத்திய அரசு விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்களுக்கு மனநல ஆலோசனை, சட்ட உதவி, அவசரகால உதவி மையங்கள் மற்றும் தூதரகங்களின் சேவைகளை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும்.

எனவே, வெளிநாடுகளில் இந்தியர்களின் உயிரிழப்புகளையும், குறிப்பாக தற்கொலை சம்பவங்களையும் தடுக்கும் வகையில் காரணங்களை முழுமையாக ஆராய்ந்து, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## தென்காசி மாவட்டம் மேக்கரை அடவி நயினார் கோவில் நீர் தேக்கத்தில் இருந்து கார் சாகுபடிக்காக கலெக்டர் ரஞ்ஜீத் சிங் தண்ணீரை திறந்து வைத்தார்

### தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்






தென்காசி மாவட்டம் மேக்கரை பகுதியில் 132 அடி கொள்ளளவு கொண்ட அடவி நயினார் கோவில் அமைந்துள்ளது. இந்த அணையின் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 7500 ஏக்கர் விளை நிலங்கள் பயன்பெறுகிறது.

தற்போது மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையினால் அணையில் 83 கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

தற்போது இந்த பகுதியில் கார் பருவ சாகுபடிக்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருவதால் அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்த நிலையில் தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் அடவி நயினார் கோவில் பாசன திட்டத்தின் கீழ் உள்ள மேட்டுக்கால், கரிசல்கால், பண்பொழி கால், வல்லாக்குளம் கால், இலத்தூர் கால், நயினாரகரம் கால், கிளாங்காடுகால், கம்பளிகால் மற்றும் சாம்பவர் வடகரை கால் ஆகிய கால்வாய்களின் மூலம் பயன்பெறும் 2147.47 ஏக்கர் விளை நிலங்களுக்கு இன்றிலிருந்து வருகிற 31.10.2026 வரை 95 நாட்களுக்கு வினாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் தென்மேற்கு பருவமழையினால் மேலும் அணையில் நீர்வரத்து அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து, எதிர்பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்கப்பெறவில்லை என்றால் அணையில் இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் எனவும், இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் வளத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டு உள்ளார்



ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில், ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் நேற்று (29.07.2026) ஜூலை மாத மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் துணை மேயர் வே. செல்வராஜ், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நந்தா தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்துறை கருத்தரங்கம்

ஈரோடு நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் அறிவியல் மற்றும் மனிதநேயத் துறை சார்பில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலுடன் (சி.எஸ்.ஐ.ஆர்) இணைந்து "ஆற்றல் சேமிப்புச் சாதனங்களுக்கான சுற்றுச் சூழல் நட்பு மற்றும் நிலையான மின் தேக்கிகள்" என்கிற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்துறைக் கருத்தரங்கம் இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைப்பெற்ற இக்கருத்தரங்கிற்கு காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சித் துறையின் அறிவியலாளர் முனைவர் எம்.சதீஸ் மற்றும் சேலம் அரசு பெண்கள் கல்லூரியின் இயற்பியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் எம். பார்த்திபவர்மன் ஆகியோர் சிறப்பு விருந்தினரனர்களாக கலந்துக் கொண்டார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர் நந்தகோபால் முன்னிலை வகித்து கருத்தரங்கினால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவரித்தார். முன்னதாக துறையின் தலைவர் என். விஜயகுமார் வரவேற்று பேசினார்.

இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் முனைவர் எம். சதீஸ் மற்றும் முனைவர் எம். பார்த்திபவர்மன் ஆகியோர் "சுற்றுச் சூழலுக்கு உகந்த மின் தேக்கிகள்" பற்றிய தகவல் களஞ்சியங்களை காணொலி காட்சி மூலம் விளக்கம் அளிக்கையில், பசுமை வேதியியல், மேம்பட்ட பொருள் அறிவியல் மற்றும் மின் வேதியியல் ஆற்றல் சேமிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினைப் பற்றி விவரித்தார்கள். மேலும் சுற்றுச் சூழலுக்கு உகந்த மின் தேக்கிகளின் உலகளாவிய பயன்பாடுகள், ஆராய்ச்சி முன்னேற்றங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பு போன்ற பல்வேறு விஷயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள்.



நிகழ்வின் முடிவில் வேதியியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் பி. பாலசுப்ரமணியம் நன்றி கூறினார்.

இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

## சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு 3 ந் தேதி உள்ளூர் விடுமுறை

### ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டம், சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளான ஆடித்திங்கள் 18-ஆம் நாள் (03.08.2026) திங்கட்கிழமை அன்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறைஅளிக்கப்படுகிறது.கல்லூரி/பள்ளிகளில் தேர்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தால்,இந்த விடுமுறைஅறிவிப்புபொருந்தாதுஎனவும்,தேர்வுகள் முன்கூட்டி அறிவித்தபடி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடுமுறையை ஈடு செய்யும் பொருட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் 22.08.2026 சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விடுமுறை செலாவணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் (Negotiable Instruments Act 1881 Central Act XXVI of 1881) அறிவிக்கப்படும் விடுமுறை அல்ல என்பதால், வங்கிகளுக்கு இவ்விடுமுறை பொருந்தாது. உள்ளூர் விடுமுறை நாளான 03.08.2026 அன்று அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்டத்திலுள்ள கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## கனிமவள கொள்ளைக்கு 3 மாதம் தற்காலிகத்தடை நிரந்தர விடியல் கிடைக்குமா? எதிர்பார்ப்பில் பொதுமக்கள்



தமிழ்நாட்டில் இருந்து பிற மாநிலங்களுக்கு கல் மற்றும் கட்டுமான பொருட்களை கொண்டு செல்ல 3 மாதத்திற்குதற்காலிக தடை விதித்துபுவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குனர் டாக்டர் பிரபு சங்கர் உத்தரவு பிறப்பித்துள்ளார்மூன்று மாதம் தற்காலிக தடை என்பது நிரந்தர தடையாகுமா என எதிர்பார்ப்பில் பொதுமக்கள் உள்ளனர்பல்வேறு அரசியல் கட்சிகள் சமூக ஆர்வலர்கள் பத்திரிகையாளர்கள் என பலரும் போராடியதன் விளைவு கனிமவள கொள்ளைக்குதற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது இது பொதுமக்கள் மத்தியில் வரவேற்கப்பட வேண்டிய விஷயமாகவும் பேசு பொருளாகவும் மாறி உள்ளது குறிப்பாக கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் பெரு முயற்சி இந்த கனிமவள கொள்ளைக்கு தடை கொடுக்கும் அளவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது இவரைப் போன்ற காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆட்சியாளர் மாவட்ட ஆட்சியாளர்கள் இருந்தால் தமிழ்நாட்டின் கனிம வளம் கொள்ளை போகாது என்பதுதான் முக்கியமானது


கனிம வள கடைக்கு

முக்கிய காரணங்கள் எனக் கூறப்படுவது: தமிழ்நாட்டிற்குள் உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமான பணிகளுக்கு கல், M-Sand, மெட்டல் ஜெல்லி போன்றவற்றின் தேவை அதிகமாக உள்ளது. ஆனால் உற்பத்தி போதவில்லை.

அதிக அளவில் வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்வதால் தமிழ்நாட்டில் விலை உயர்ந்து, சப்ளை குறைகிறது.கனரக லாரிகளின் போக்குவரத்தால் சாலைகள் சேதமடைகின்றன. போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் அதிகமாகின்றன. கன்னியாகுமரி, தென்காசி, தேனி, கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் உள்ள சுரங்க பகுதிகள் மேற்கு தொடர்சி மலையின் சுற்றுச்சூழல் முக்கிய பகுதியில் உள்ளன. அதிக சுரங்கத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. சட்டவிரோத சுரங்கம் மற்றும் அளவுக்குஅதிகமாகதோண்டுவது அதிகரித்து வருகிறது கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் கல் பற்றாக்குறை இல்லை. அதனால் புவியியல் மற்றும் சுரங்கத துறை இயக்குனர் டாக்டர் பிரபுசங்கர் இ.ஆ.ப. இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் தமிழ்நாடு சட்ட விதி 3(A) படி, ரஃப் ஸ்டோன், குவாரி கற்கள், M-Sand, மெட்டல்ஜெல்லி, கட்டுமான கற்கள் போன்றவற்றை பிற மாநி2. லங்களுக்கு கொண்டு செல்ல தடை.. இந்த தடை உடனடியாக அமலுக்கு வந்து 3 மாதங்களுக்கு இருக்கும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களுக்கு மட்டும் இந்த தடை பொருந்தாது. கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், சுரங்கத்துறை அதிகாரிகள் எல்லை பகுதிகளில் கண்காணித்து இந்த தடையை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்

## சிவகங்கை அருகே மாவீரர் நன்னி அம்பலம் நினைவு நாள் விழா

### திரளாகப் பங்கேற்ற மக்கள்



அந்நியர்களின் ஆதிக்கத்தில் இருந்த சிவகங்கைச் சீமையை ராணிவேலு நாச்சியார் மீட்டெடுத்ததில் பல மாவீரர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. அந்த வகையில் ஒக்கூர் - என்ற ஊருக்கு ஒரு தனி வரலாறும் உண்டு . இலக்கியத்தில்சங்ககாலப்புலவர்ஒக்கூர்மாசாத்தியார் மற்றும் சங்ககாலப் புலவர் முத்து ஆகியோர்கள் இங்கு பிறந்து சரித்திரம் படைத்தார்கள் என்பது ஒரு பக்கம் . இதன் இன்னொரு பக்கம் சிவகங்கை வரலாற்றில் மாவீரர் நன்னி அம்பலம் அவர்களின் போரும் வீரமும் ஆகும்.ராணிவேலுநாச்சியாரின்போர்படைகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் படையை தலைமை தாங்கி நடத்தியவர் மாவீரர் நன்னியம்பலம் ஆவார். கிழக்கிந்திய கம்பெனிகளோடு இவர் நடத்திய போரில் எதிர் கொள்ள முடியாமல் வெறுப்படைந்த கம்பெனியார்கள் 28. 07.1801 ல் ஒக்கூரை தீ வைத்து எரித்து விட்டனர் என்பது வரலாறு. இவ்வளவு வீரம் செறிந்த நன்னியம்பலத்தின் திருவுருவச் சிலை ஒக்கூர் அருகே ஸ்ரீ வெங்கலமுடைய அய்யனார் கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அவரின் 225 - வது நினைவு நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.இந்த விழாவை முன்னிட்டு பாண்டிய மண்டலத்தில் உள்ள 14 - தன்னரசு கள்ளர் நாடுகளைச் சேர்ந்த நாட்டார்கள் பங்கேற்று சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அப்போது நன்னி அம்பலம் அவர்களின் திரு உருவச் சிலைக்கு சிறப்புடன் வழிபாடுகளும் ஆராதனைகளும் நடைபெற்றன.

## தூத்துக்குடி 2வது ரெயில்வே கேட் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்

### மத்திய இணையமைச்சருக்கு பாஜக மாவட்ட தலைவர் சித்ராங்கதன் கோரிக்கை கடிதம்



தூத்துக்குடி மேலூர் 2-வது ரயில்வே கேட் பகுதியில் சிக்னல் சென்சார் செயல்பாட்டால் தேவையற்ற முறையில் ரயில்வே கேட் அடிக்கடி மூடப்பட்டு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதால், அதற்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் சித்ராங்கதன், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு, பாராளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அந்தமனுவில்,தூத்துக்குடி மாநகரின் முக்கிய போக்குவரத்து இணைப்புகளான 1-வது மற்றும் 2-வது ரயில்வே கேடுகளை தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், வணிகர்கள் மற்றும் அவசரகால வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

தற்போது, தூத்துக்குடி ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் அல்லது நிலையத்துக்கு வரும் ரயில்கள் மற்றும் என்ஜின்கள் தடம் மாற்றும் பணிக்காக 1-வது ரயில்வே கேட்டை கடந்து மேலூர் பகுதியில் உள்ள எஸ்.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி அருகே வரை சென்று மீண்டும் பின்னோக்கி திரும்புகின்றன. அப்போது அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள ஆக்குபென்சி சென்சார் (Occupancy Sensor / Axle Counter Sensor) செயல்படுவதால், ரயில் 2-வது ரயில்வே கேட்டை அடையாத நிலையிலும் எச்சரிக்கைசிக்னல்தானாக இயங்கி 2-வது ரயில்வே கேட் மூடப்படுவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாள்தோறும் பல முறை தேவையின்றி 2-வது ரயில்வே கேட் மூடப்படுவதால், நீண்ட நேர போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். மேலும், பள்ளி மாணவர்கள், வணிகர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசரகால வாகனங்களும் கடும் சிரமத்தை சந்தித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணப்பட்டால், தூத்துக்குடி மாநகரில் நீண்டகாலமாக நிலவி வரும் 2-வது ரயில்வே கேட் போக்குவரத்து நெரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.